Register No. [ ]

# FA7A

5842–23

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Fourth Year – Seventh Semester

## BANKING LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : 2 ½ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the risks in opening online accounts without proper introduction.

   உரிய அறிமுகம் இல்லாமல் துவங்கப்படும் இணையவழி கணக்குகளால் ஏற்படும் இன்னல்களை விளக்குக.

2. What is meant by Negotiable Instruments? Explain the importance of sec.138 to 142 of the Negotiable Instruments Act.

   மாற்றுமுறையாவணங்கள் என்றால் என்ன? மாற்று முறையாவண சட்டப்பிரிவு 138 முதல் 142 வரை கூறப்பட்டுள்ள முக்கியத்துவங்களை விளக்குக.

3. Explain the salient features of the Financial Institutions Act, 1983.

   நிதி நிறுவனங்கள் சட்டம், 1983-ன் முக்கியக் கூறுகளை விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State and explain the attachment of deposits by the Income Tax Authorities.

   வருமான வரி துறை அதிகாரிகளால் வைப்பீடுகள் பற்றுகை செய்யப்படல் என்பதை பற்றிக் கூறி விளக்குக.

5. Who is a collecting banker? Discus its duties and liabilities to his customer?

   வசூலிக்கும் வங்கி என்றால் என்ன? இந்த வங்கி வாடிக்கையாளருக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மற்றும் அதன் கடப்பாடுகளை விவாதிக்க.

6. Discuss the business permitted and prohibited for a banking company under the Banking Regulation Act, 1949.

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949-ன் படி வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத வர்த்தகங்களைப் பற்றி விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Functions of RBI.

இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்.

(b) Restrictive Indorsement.

கட்டுப்படுத்துகின்ற மேற்குறிப்பு.

(c) Crossing of Cheques.

காசோலை கீறிலிடல்.

(d) Rules relating to lost Instrument.

காணாமல் போன ஆவணங்கள் குறித்த விதிகள்.

(e) Promissory notes.

கடனுறுதிச் சீட்டுகள்.

(f) Letter of credit.

நம்பிக்கைக் கடிதம்.

(g) Garnishee Order.

பொருள் பற்றுகை ஆணை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Kumar draws a cheque in favour of Rajan for a sum of Rs. 5,000/- in numerical and in words as Rs. Fifty thousand on 05/05/2021. Can the banker honour the cheque?

குமார் என்பவர் 05/05/2021 தேதியிட்டு ராஜன் என்பவருக்கு ஒரு காசோலையை எழுதி கொடுக்கிறார். அதில் ரூபாய் 5,000/- என எண்ணிலும், ரூபாய் ஐம்பதாயிரம் என எழுத்திலும் எழுதி கொடுக்கிறார். வங்கியர் அக்காசோலைக்கு மதிப்பளிக்கலாமா?

9. A business man approaches a bank for loan. The banker who knows his personal repaying capacity, promised to sanction the loan without surety. Is the transaction valid?

ஒரு வணிகர் கடன் ஒன்றை பெறுவதற்காக ஓர் வங்கியை அணுகுகின்றார். கடனைத் திரும்பச் செலுத்தும் அவரது சொந்த தகுதியை அறியும் வங்கியாளர், பிணையம் இல்லாமல் கடன் அளிக்க உறுதியுரை அளிக்கிறார். இந்நடைமுறை செல்லுபடியாகுமா?

10. 'A' is a customer of bank 'B', 'A' draws a bearer cheque and kept it inside a drawer. 'A' came to know that it was missing and immediately informed to the banker by phone to 'stop payment' to the particular cheque. 'C' the holder of the cheque received money from the bank at the counter. 'A' filed a suit against the bank. Can he succeed?

'ஆ' வங்கியில், 'அ' என்பவர் வாடிக்கையாளர். அவர் ஒரு காசோலை வரைந்து டிராயரில் வைத்திருந்தார். அக்காசோலை தொலைந்தது தெரிந்த உடனே, அவர் தொலைபேசி மூலம் வங்கியினை தொடர்பு கொண்டு கா்சோலைக்குப் பணம் வழங்கக்கூடாது என்று தெரிவித்தார். 'இ' என்பவர், காசோலையின் உரிமையா் என்ற முறையில் பணம் பெற்றுச் சென்றுவிட்டார். வங்கியின் மீது 'அ' என்பவர் வழக்கு தொடருகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

---

Register No. | | | | | | | | |

**FA7B**

5893–23

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

LABOUR LAW – II

GOVERNMENT LAW COLLEGE, TRICHY ★ LIBRARY ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain and differentiate total and partial disablement and give an account of the determination of the amount of compensation under the Employee's Compensation Act, 1923.

   தொழிலாளர் இழப்பீடுச் சட்டம் 1923-ன் படி முழுமையான மற்றும் பகுதி தகுதியிழப்பினை விளக்கி வேறுபடுத்துக மற்றும் இச்சட்டத்தின் படி இழப்பீடு தொகை எவ்வாறு நிர்ணயிக்க வேண்டும் என்பதனை தொகுத்து கூறுக.

2. Explain the various provisions relating to working hours of workers under the Factories Act, 1948.

   1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் படி, தொழிலாளர்களின் வேலை நேரம் குறித்த பல்வேறு வகையங்களை விளக்குக.

3. Explain the concept of gratuity and discuss the employee's eligibility for gratuity.

   பணிக்கொடையின் அடிப்படை கருத்தினை விளக்கி, தொழிலாளி பணிக்கொடை பெறுவதற்கான தகுதிகளை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the nature and scope of the Employee's Provident Funds Act, 1952.

   1952-ம் ஆண்டு தொழிலாளர் வைப்பு நிதி சட்டத்தின் அளாவுகை மற்றும் நோக்கெல்லையை விளக்குக.

5. Explain the various kinds of Bonus and the calculation of bonus as per the Full Bench Formula.

மிகுதியத்தின் வகைகள் பற்றியும், முழு ஆயத்தின் படி மிகுதியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை விளக்குக.

6. State the powers and functions of Employees State Insurance Court.

தொழிலாளர் அரசு காப்பீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை எடுத்துரைக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Allocable Surplus

ஒதுக்கப்பட கூடிய உபரித் தொகை

(b) Scheduled Injury

அட்டவணைக் காயம்

(c) Continuous service

தொடர்ச்சியான பணி

(d) Social security

சமூகப் பாதுகாப்பு

(e) Employee's Pension Scheme, 1995.

தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995.

(f) Employment of young persons

இளம் வயதினரை பணிக்கு அமர்த்துதல்

(g) Health and Safety under the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

1947-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' employed in a factory, after finishing his work, but before reaching his home, attended a dinner arranged by a co-worker in a hotel where he died due to food poisoning. His wife claims compensation from the employer – Decide.

'A' என்ற தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளி வேலை முடிந்து வீட்டிற்கு செல்வதற்கு முன், சக தொழிலாளி ஒரு உணவகத்தில் ஏற்பாடு செய்திருந்த இரவு விருந்தில் கலந்து கொள்கிறார். அங்கு உணவில் விஷம் கலந்திருந்ததால் அவர் இறந்து போகிறார். அவரது மனைவி முதலாளியிடமிருந்து இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.

9. Babu was working in a Newspaper company. He was dismissed from services on the charges of misappropriation of funds and subsequently removed from service. He gave an application for the payment of Provident Fund to the company. The Newspaper management refused. Decide.

பாபு என்பவர் ஒரு செய்தித்தாள் நிறுவனத்தில் வேலை செய்கிறார். அந்த நிறுவனத்தின் நிதியை கையாடல் செய்த காரணத்தினால், நிர்வாகம் அவரை பணி நீக்கம் செய்தது. அவர் தனது வருங்கால வைப்பு நிதியை வழங்குமாறு நிர்வாகத்திடம் விண்ணப்பிக்கிறார். பத்திரிகை நிறுவனம் தர மறுக்கிறது. தீர்வு காண்க.

10. Kamala, a newly appointed lady worker was working in the leave vacancy. She worked only 30 days in that calendar year. She claimed maternity leave for her third child after her delivery. The management refused. Decide.

கமலா என்ற பெண் தொழிலாளி காலியாக உள்ள ஒரு விடுப்பு இடத்தில் புதிதாக நியமிக்கப்படுகிறார். அந்த காலண்டர் வருடத்தில் 30 நாட்கள் மட்டுமே அவர் பணிபுரிந்துள்ளார். தனக்கு மூன்றாவது குழந்தை பிறந்த பின்னர் மகப்பேறு சலுகைகள் வழங்குமாறு கோருகிறார். நிர்வாகம் மறுக்கிறது. முடிவு காண்க

———————

Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**FA7C**

5843–23

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Fourth Year – Seventh Semester

ENVIRONMENTAL LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the social and economic effects of Environmental Pollution in India.

   இந்தியாவில் சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டின் மூலம் ஏற்படும் சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை விவரிக்க.

2. "Climatic change rise are likely to be high or very high by the end of the 21st Century" – Comment.

   "இருபத்தி ஒன்றாவது நூற்றாண்டின் இறுதியில் அதிக அல்லது மிக அதிக அளவில் கால நிலையில் மாற்றம் ஏற்படும் அபாயம் உள்ளது" – விமர்சிக்கவும்.

3. Explain the remedies available to an aggrieved person for Environmental Pollution.

   சுற்றுச்சூழல் மாசடைதலால் பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்கக் கூடிய சட்டத் தீர்வு வழிகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the obligation for relief under no fault liability.

   குற்றமற்ற பொறுப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் நிவாரணம் வழங்கும் கடப்பாட்டினை விவாதிக்க.

5. Explain the reasons for depletion of ground water resources.

நிலத்தடி நீர் வளங்கள் குறைவதற்குரிய காரணங்களை விவரிக்க.

6. Analyse the power and functions of the Central Pollution Control Board under the Water Act, 1974.

நீர்ச் சட்டம், 1974ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் அதிகாரம் மற்றும் பணிகளைப் பகுப்பாய்வு செய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on <u>FIVE</u> of the following :

பின்வருவனவற்றுள் <u>ஐந்திற்கு</u> சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Village Forests

கிராமக் காடுகள்

(b) Silent Valley case

அமைதிப் பள்ளத்தாக்கு வழக்கு

(c) Precautionary principle

முன்னெச்சரிக்கை நெறிமுறை

(d) Paris Climatic Agreement

பாரிஸ் தட்பவெப்ப உடன்படிக்கை

(e) Prevention of cruelty to animals

விலங்குகள் வதைத் தடுப்பு

(f) Public participation

பொது மக்கள் பங்கேற்பு

(g) Chipco Movement

சிப்கோ இயக்கம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் <u>இரண்டிற்கு</u> சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Government of Kerala acquired the Lands adjacent to national park to sustain Tigers' habitat. The land owners objected and filed a Petition claiming that their right to livelihood would be affected. – Decide.

கேரளா அரசு புலிகளின் வாழ்விடத்தை மேம்படுத்த தனது தேசீய பூங்காவிற்கு அருகிலுள்ள நிலங்களை கையகப்படுத்தியது. இதனை எதிர்த்து நில உரிமையாளர்கள் வழக்கு தொடுத்து தங்களது வாழ்வாதார உரிமை பறிக்கப்படுவதாக வாதிட்டனர் – தீர்மானிக்க.

9. A sugar factory let out trade effluents into river. As a result, the river water became polluted and gravely affected its quality. The nearby residents filed a Petition to close the sugar factory – Decide.

சர்க்கரை ஆலை திடக்கழிவுகளை ஆற்றில் விட்டதால் ஆற்றின் நீர் மாசுபடுத்தப்பட்டு தூய தன்மையினை இழந்தது. அவ்வாற்றின் அருகாமை உறைவிடர் சர்க்கரை ஆலையை மூட வேண்டும் என்று வழக்கிட்டனர் – தீர்மானிக்கவும்.

10. A factory was working day and night, thereby causing sufficient noise to annoy the residents of the locality. The Court ordered the closure of the factory immediately under Sec. 133 of Cr.P.C. Decide the validity of the order passed by the Court.

தொழிற்சாலை ஒன்று இரவும் பகலும் ஒரு குடியிருப்புப் பகுதியில் அதிக இரைச்சலுடன் செயல்பட்டு வந்தது. அதனால் அப்பகுதி வாழ்மக்கள் எரிச்சலுற்றனர். நீதிமன்றமானது குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 133ன் கீழ் தொழிற்சாலையை உடனடியாக மூட உத்தரவிட்டது. நீதிமன்ற தீர்ப்பின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

**FA7D** **5844-23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain various development of Administrative Law in India.

   இந்தியாவில் நிர்வாக சட்டத்தின் பல்வேறு வளர்ச்சியை விளக்குக.

2. Explain the reasons for the development of Delegated Legislation.

   ஒப்படைவு சட்டங்களின் வளர்ச்சிக்கான காரணங்களை விளக்குக.

3. Explain the principles of Natural Justice.

   இயற்கை நியாய விதிக் கோட்பாட்டை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the method by which the judiciary controls the Administrative discretion.

   நிர்வாக விருப்புரிமையை நீதிமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என விளக்கவும்.

5. Explain the power and jurisdiction of the Central Administrative Tribunal and State Administrative Tribunal.

   மத்திய நிர்வாக தீர்ப்பாயம் மற்றும் மாநில நிர்வாக தீர்ப்பாயத்தின் அதிகாரம் மற்றும் ஆள்வரையை விளக்குக.

6. State the salient features of Public Corporations.

   பொதுத்துறை நிறுவனங்களின் சிறப்பு இயல்புகளைக் கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Rule of Law

சட்டத்தின் ஆட்சி

(b) One who hears must decide

விசாரிப்பவரே முடிவு செய்யலாம்

(c) Statutory Remedies

சட்டமுறை தீர்வழிகள்

(d) Private Law

தனிச் சட்டம்

(e) Procedural Control of Delegated Legislation

ஒப்படைவு சட்டத்தின் நடைமுறை கட்டுப்பாடு

(f) Judicial Review of Administrative Action

நிர்வாக செயல்கள் நீதிமன்றத்தால் மறு ஆய்வு

(g) By-laws

துணை விதி.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. U.P. Municipalities Act, 1916, Section 115 authorises the Town Area Committee to fix fee for the use of occupation of any immovable property vested in the Management of Committee by making by-laws. Committee framed certain bye-laws and vested all rights and power to levy and collect commission on sale or purchase of vegetables and fruits in the Town. Is the bye-law valid?

உத்திர பிரதேசம் நகராட்சிகள் சட்டம், 1916, பிரிவு 115, மேலாண்மைக் குழுவிடம் உள்ள அசையா சொத்துக்களை ஆக்ரமித்து பயன்படுத்துவோருக்கு துணை விதியின் மூலம் கட்டணம் நிர்ணயம் செய்ய நகர பரப்பு குழுவுக்கு அதிகாரம் வழங்கியது. நகரத்தில் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பதற்கும் அல்லது வாங்குவதற்கும் தரகு பெறவும், விதிக்கவும் எல்லா உரிமைகள் மற்றும் அதிகாரத்திற்கான சில துணை விதிகளை குழு உருவாக்கியது. இந்தத் துணை விதி செல்லுமா?

9. Whether a post card written by the detenu from the prison will be sufficient to activise the Court? – Decide.

கைதி சிறையிலிருந்து தபால் அட்டையில் நீதிமன்றத்துக்கு எழுதுகிறார். இக்கடிதம் நீதிமன்றம் செயலாற்ற போதுமானதா? - முடிவு செய்க.

10. Whether a Quo Warranto Writ can be issued against the members of the Managing Committee of Private School?

தனியார் பள்ளி மேலாண் குழு உறுப்பினர்களுக்கு எதிராக தகுதிநிலை வினவும் நீதிப்பேராணை வழங்கமுடியுமா?